பிரித்தானிய தமிழ் மொழிப் பரீட்சைச் சபை
British Tamil Examination Board (BTEB)
www. bteb.org.uk

# தமிழ் – கேட்டல் பரீட்சை

## Tamil - Listening Test

## தரம் (Grade) : 07/08

Version A

# Recording Notes

# PART - I

1. வணக்கம், மாலினி கைப்பந்துப் போட்டி என்ன நேரம் நாளை நடக்கவிருக்கிறது?

   - நாளை மாலை 5 மணிக்கு நடைபெறும்.

2. A - எனக்கு காலையில் தோசையும் சம்பலும் சாப்பிட்டவுடன் திராட்சைப் பழம் சாப்பிட விருப்பம். உங்களுக்கு என்ன பிடிக்கும்?

   B - இல்லை பரதன் எனக்கு காலையில் தேனீர் மட்டும் குடிப்பதே விருப்பம். காலையில் பழங்கள் சாப்பிடப் பிடிக்காது.

3. A - ரூபி நேற்று மாலை எங்கே போனீர்கள். நான் நீண்ட நேரம் உணவு விடுதியில் உங்களுக்காக காத்திருந்தேன்.

   B - மன்னிக்க வேண்டும் சிவா, தீடீரென எனது நண்பியுடன் புதிய திரைப்படம் ஒன்று பார்க்கப் போனதால் உங்களைச் சந்திக்க முடியவில்லை.

4. A - கீதா உங்கள் கூடைப்பந்தாட்டத்தில் வெற்றி பெற்றதிற்கு என்ன பரிசு பெற்றீர்களா?

   B - எமது குழுவுக்கு ஓர் பெரிய வெற்றிக் கிண்ணமும் எமக்கு தனித்தனியே பூச்சொண்டும் வெற்றிப்பதக்கங்களும் தந்தார்கள்.

5. A - வசந்தி நேற்றுமாலை எங்கே போனீர்கள்?

   B - நான் என் கணவருடன் துவிச்சக்கர வண்டியில் பூங்காவுக்குச் சென்றேன்.

# PART II

கிருஷாந் : எனக்கு உதைபந்தாட்டம் என்றால் மிகவும் பிடிக்கும். சிறுவயதில் இருந்தே என் நண்பர்களுடன் சேர்ந்து கிரிக்கற், பூப்பந்து விளையாடினாலும் எனது முழுக்கவனமும் உதைபந்தாட்டத்திலேயே இருந்தது. நான் எனது கூடுதலான விளையாட்டு நேரத்தை அதற்காகவோ செலவழிக்கின்றேன்.

கண்ணன் : எனக்கு மாலைநேரங்களில் நண்பர்களுடன் விளையாடப் பிடிக்கும். ஆனால் எனது தொழில் மாலை 3 முதல் 10 மணி வரை இருப்பதால் நண்பர்களுடன் மாலையில் சேர்ந்து விளையாட முடியவில்லை. அதனால் வார இறுதி நாட்களில் நான் முற்றாக நண்பர்களுடன் சேர்ந்து எனது நேரத்தைக் கழிப்பேன்.

முகுந்தன் : நான் கணணியில் தொடர்ந்து படிப்பதுடன் சில விளையாட்டுக்களையும் விளையாடுவேன். ஆனால் கோடைகாலங்களில் விளையாட்டு மைதானத்தில் ஓடி விளையாடுவதில்தான் எனக்கு அதிக விருப்பம்.

கிருஷாகரி : இந்த நத்தார் விடுமுறைக்கு நான் இலண்டனில் இருந்து அவுஸ்திரேலியா போகவிருக்கிறேன். அங்கு நத்தார், புது வருட கொண்டாட்டம் மிகவும் நன்றாக இருப்பதுடன், மிகவும் வெப்பமான காலநிலையும் இருக்கும். எனது இரு நண்பிகளும் என்னுடன் வருகிறார்கள்

கார்த்தி : எனக்கு வீட்டில் இருக்கவே பிடிக்கும். தொலைக்காட்சி பார்ப்பதிலும், அதில் குறிப்பாக மிருகங்களின் நிகழ்ச்சிகளும், கடல் வாழ் உயிரினங்களின் நிகழ்ச்சிகளும் மிகவும் விருப்பம். அதனால் வெளியே செல்லாது வீட்டிலிருந்தபடியே உலக நிகழ்ச்சிகளை தொலைக்காட்சியில் பார்ப்பதே எனது முக்கியமான பொழுபோக்கு.

# PART III

## விளையாட்டுச்சுற்றுலா

நாங்கள் உதைப்பந்தாட்ட அரையிறுதிப்போட்டிக்காக ஒரு நகருக்கு இன்று வந்துள்ளோம். நாங்கள் இருக்கும் விடுதி ஓர் ஐந்து நட்சத்திர விடுதியாகும். இங்கு வரும் விருந்தினர் அனைவருக்கும் அவர்களது களைப்பைப் போக்கி மகிழ்ச்சியாக இருக்க எந்த காலநிலையானாலும் மிகவும் அழகான உள்ளக நீச்சல் தடாகம் ஒன்று உள்ளது. இது அனைவரையும் கவர்ந்துள்ளது. இதை விருந்தினர் எல்லோரும் பயன்படுத்த விரும்பினர். நாளை எமது குழுவினர் எங்கள் உதைபந்தாட்ட அரையிறுதிப் போட்டிகள் முடிந்ததும் நாம் தங்கியிருக்கும் நகருக்கு அண்மையிலுள்ள பெரிய பொருட்காட்சிச் சாலையைப் பார்க்கவிருக்கிறோம். அங்கு எம்முடன் எமது ஆசிரியர்களும் வழிகாட்டிகளும் வருவார்கள். அதை அடுத்து மிருகக்காட்சிச் சாலைக்கும் செல்வோம். ஆனால் அங்கே மிருகங்களின் கூண்டுகளுக்குப் பக்கத்தில் யாரும் போகக் கூடாது என எமது வழிகாட்டிகள் எமக்கு அறிவுறுத்தினார்கள். காரணம் அது மிகவும் ஆபத்தானது. நாளை மறுநாள் வியாழக்கிழமை எமது குழு இறுதி போட்டியில் பங்கெடுப்பதற்காக 200 மைல்களுக்கு அப்பாலுள்ள ஓர் பிரசித்தி பெற்ற விளையாட்டரங்கிற்கு விமானம் மூலம் செல்கின்றோம். காலநிலை சற்றுக் குளிராகவும் கடும் மழையாகவும் இருப்பதால் விமானம் மூலம் செல்வதே சிறந்தது என எமது குழு பொறுப்பாளர் முடிவெடுத்தார். ஆனால் கோடைகாலம் இங்கு வீதிவழி போக்குவரத்து மிகவும் சந்தோஷமான பயணமாக இருக்குமென எங்கள் ஆசிரியர் கூறினார்.

# PART IV

குமார் : வேணி, நீங்கள் ஏன் நேற்று எங்களுடன் படம் பார்க்க வரவில்லை?

வாணி : மன்னிக்க வேண்டும். குமார் நேற்று காலநிலை மிகவும் வெப்பமாகவும் ஒரே எரிச்சலாகவும் இருந்தது. அதனால் வீட்டிலேயே இருந்து விட்டேன்?

குமார் : தற்போது உலக கால நிலை மிகவும் மாறி வருவதால் எல்லா இடங்களிலும் கால நிலையில் சடுதியில் வேறுபாடு காணப்படுகிறது.

வாணி : ஆம், பூமி சூடாகுவதாக விஞ்ஞானிகளும் புவியியலாளர்களும் எச்சரிக்கை செய்கிறார்கள்.

வாணி : மனிதர்களின் செயற்பாடுகளே இந்த பூமியின் வளி மண்டலத்தை சூடாக்க செய்கிறது.

குமார் : ஆம் வாகனங்களின் பெருக்கமும் மக்களின் போக்குவரத்தும் முக்கிய காரணமாக இருக்கிறதல்லவா?

வாணி : அப்படி என்று தனியே கூறமுடியாது. தொழிற்சாலைகளும் மற்ற நச்சு வாயுக்கள் கழிவாக வெளி வருவதும் இதில் அடங்கும்.

குமார் : நாளாந்தம் நாம் பாவிக்கும் பொருட்களில் இயற்கைக்கு சாதகமான முறையில் நாம் எமது வாழ்க்கை முறையை மாற்ற வேண்டும்.

வாணி : ஆனால் நடைமுறை உலகில் அதன் சாத்தியம் குறைந்து வருகிறது.

குமார் : அப்படியானால் மனிதர்கள் தமக்கு தாமே கேடு விளைவிக்கிறார்கள் அல்லவா?

வாணி : ஆம் அதில் சந்தேகமில்லை.

குமார் : மனிதர்கள் தமக்கு மட்டுமல்ல பூமியில் வாழும் மிருகங்கள், பறவைகள், தாவரங்கள் எல்லாவற்றுக்கும் கேடு வரும் வகையில் செயல்படுகிறார்கள்

வாணி : ஆம் அதை நிறுத்தினால்தான் இந்த பூமியில் உயிரினங்கள் சந்தோஷ மாக வாழமுடியும்

# PART V

Ragu : Raji நீ எதிர்காலத்தில் என்ன மாதிரியான தொழில் செய்ய விரும்புகிறாய்?

Raji : நான் ஒரு விமானப் பணிப் பெண்ணாக வர விரும்புகின்றேன். காரணம் உலகம் முழுவதும் உள்ள வேறுபட்ட கலாச்சார மக்களில் பலரை காணும் வாய்ப்பு அதில் உள்ளது Ragu

Ragu : ஏன் நீ ஒரு பாடகியாக வந்தால் கூட உலகம் முழுவதும் சுற்றும் வாய்ப்பு கிடைக்கும் அல்லவா? உன்னுடைய இனிமையான குரல் அது ஒரு வாய்ப்பாக இருக்கும் அல்லவா?

Raji : அது இலகுவல்ல. அது மட்டுமல்ல அது நாம் மற்றவர்களுக்கு சேவை புரிவதைப் போல் தனிப்பட்ட மகிழ்வைத் தராது.

Ragu : எனக்கு ஓர் விஞ்ஞானியாக வர வேண்டும் என ஆசை. ஏனென்றால் நான் மக்களுக்கு தேவையானவற்றை கண்டுபிடித்து அவர்களின் கஷ்டங்களைப் போக்க ஆசைப்படுகின்றேன்.

Raji : நல்லது Ragu ஆனால் மக்களுடன் சேர்நது பழகும் வாய்ப்பு அதில் மிகவும் குறைவு. அத்துடன் தனிமையில் இருந்து ஆராய்ச்சி செய்வது எனக்கு சுத்தமாகப் பிடிக்காது

Ragu : உன்னுடைய பொழுதுபோக்கு என்ன Raji.

Raji : எனக்கு பொழுது போக்கு நேரம் கிடைக்கும் போதெல்லாம் என் செல்லப் பிராணிகளுடன் வீட்டுத் தோட்டத்தில் விளையாடுவேன். அது எனக்கு மிகவும் பிடித்தமான பொழுதுபோக்கு.

Ragu : எனக்கும் அது மிகவும் விருப்பம். என்னிடம் இரண்டு முயல்களும் ஒரு பூனையும் இருக்கின்றன. அவை எப்போதும் வீட்டில் என்னுடனேயே இருக்கும். இரவில் அவை தனியான அறைகளில் கூட்டினுள் தூங்கும்.